DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

Calendar ..CC.156/2018
Miscellaneous ..

Preliminary ..
Register ..
Sessions ..

PW 4
Deposition of Witness for Prosecution
Court

Name : பாலமுருகன்

Father's Name : அப்பர்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 20.07.2022.

**<u>முதல் விசாரணை</u>** : நான் தற்போது திருவதிகையில் வசித்து வருகிறேன். நான் கடலூர் ரோட்டில் ஒர்க் ஷாப் வைத்துள்ளேன். அசா.1 முதல் அசா.3 மற்றும் பட்டியல் சாட்சி 2 காஞ்சனா, பட்டியல் சாட்சி 5 ஜெயகணேஷ் ஆகியோர்களை தெரியும். பட்டியல் சாட்சி தினேஷ் மற்றும் பட்டியல் சாட்சி 8 தஷ்ணாமூர்த்தி ஆகியோர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் (தேதி, மாதம் தற்போது எனக்கு நினைவில்லை) நான் எனது ஒர்க் ஷாப் வேலையை முடித்து காலை 11.00 மணியளவில் எனது வீட்டிற்கு சென்ற போது கிருஷ்ணமூர்த்தியும், குணசேகரும் சண்டை போட்டுக்கொண்டதாக நான் கேள்விப்பட்டேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. அவர்கள் இருவரும் எனக்கு உறவினர்கள்

என்பதால் அவர்கள் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது நான் சென்று பார்த்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை நான் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது போலிசார் என்னிடம் வாங்கினார்கள். மேற்படி பார்வை மகசர் ஆவணம் குறித்து வேறு எந்த விவரமும் தெரியாது. மேற்படி பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் **அசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசர் ஆவணத்தில் எனது கையொப்பம் இல்லை. எனக்கு இவ்வழக்கு சம்பவம் குறித்து வேறு எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** : போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையில் நான் கோவில் வேலை செய்து வருகிறேன் என்றும், எங்கள் ஊரைச் சேர்ந்த நடராஜன் என்பவருக்கும், கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கும் வீட்டு மனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது என்றும், இந்நிலையில் கடந்த 14.08.2018 ந் தேதி மாலை 03.30 மணியளவில் நானும், தினேஷ் என்பவரும் நடராஜன் வீட்டின் அருகே சொந்த வேலையாக நின்றுகொண்டிருந்தோம் என்றும், அப்போது நடராஜன் என்பவரது வீட்டின் சுவற்றில் பூசு வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது கிருஷ்ணமூர்த்தி நடராஜனிடம் வந்து ஏண்டா தேவிடியா பையா என்னிடத்தில் சாரம் கட்டி, வேலை செய்கிறாய் என்று கேட்டார் என்றும், அதற்கு நடராஜன் சுவர் பூசிவிட்டு சாரத்தை எடுத்துவிடுவேன் என்று கூறினார் என்றும், அதற்கு கிருஷ்ணமூர்த்தி என்னிடத்தில் கால் வைக்காதே என்று திட்டிக்கொண்டு அவர் கையில் வைத்திருந்த அருவாமனையால் நடராஜனின் முதுகில் வெட்டினார் என்றும், உடனே அருகில் இருந்த நடராஜனின் தம்பிகளான மூர்த்தி மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் விலக்க போனபோது கிருஷ்ணமூர்த்தியின் தம்பி குப்புசாமி என்பவர் கையில் வைத்திருந்த கத்தியால் மூர்த்தியின் கையில் வெட்டினார் என்றும், ஏழுமலை என்பவர் தடியால் ஆறுமுகத்தின் தலையில் அடித்தார் என்றும், சண்டையை விலக்க வந்த நடராஜனின் மகன் ஜெயகணேஷ் என்பவரை குப்புசாமி அவரது இடது தோள்பட்டையில் கத்தியால் வெட்டினார் என்றும், நடராஜனின் மனைவி காஞ்சனாவை மேற்படி மூவரும் சேர்ந்து கையால் அடித்தார்கள் என்றும், உடனே அருகில் இருந்த நானும், என்னுடன் இருந்த தினேஷும் சண்டையை விலக்கி விட்டோம் என்றும், அப்போது மேற்படி நபர்கள் அங்கிருந்து போகும்போது அனைவரும் ஆயுதங்களை தூக்கி காட்டி எங்கள் மண்ணில் கால் வைத்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று நடராஜன் குடும்பத்தார்களை பார்த்து கொலை மிரட்டல் விடுத்துவிட்டு சென்றார்கள் என்றும், காயம் பட்ட நடராஜன், மூர்த்தி, ஆறுமுகம், ஜெயகணேஷ் மற்றும் காஞ்சனா ஆகியோர்களை அங்கிருந்தவர்கள் உதவியுடன் சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றும், மேற்படி சண்டை சம்மந்தமாக பண்ருட்டி உதவி ஆய்வாளர் 15.08.2018 அன்று 09.00

மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட போவதாகவும், அதற்கு என்னையும், என்னுடன் அப்போது நின்றிருந்த தஷ்ணாமூர்த்தி என்பவரையும் சாட்சிகளாக இருக்க சொல்லி சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பின்னர் சம்பவ இடத்தில் கிடந்த சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களை 11.00 மணிக்கு எங்கள் முன்னிலையில் மகசர் தயார் செய்து அதை கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும் அதில் நானும், தஷ்ணாமூர்த்தியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பில் இருந்து விலகி பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.